2 1 FEB 2018

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2014/2015 (யூன் 2017)

## FAS 2233 Film Appreciation & Tamil Films

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி–I இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி-II இல் இருந்து மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி – I

01. (அ) கதைக்களம், கதாபாத்திரங்கள், கதாபாத்திரமாக்கல் ஆகிய அம்சங்களின் அடிப்படையில் திரைப்படமொன்றுக்குரிய கதையாடல் நுட்பங்களை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) திரைப்படமொன்றில் கதைச் சிக்கல்களும், அச்சிக்கல்களுக்கான தீர்வுகளும் எவ்வாறான வகைகளில் முன்வைக்கப்படலாம் என்பதை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

02. திரைப்படமொன்றில் இடம்பெறக்கூடிய முக்கிய தொழில்நுட்ப விடயங்களின் வகிபங்குகளை எடுத்துரைக்க.

(அ) கமரா தூரங்கள், அசைவுகள், பார்வைகள் (10 புள்ளிகள்)

(ஆ) ஒலியமைப்பு – ஒளியமைப்பு (05 புள்ளிகள்)

(இ) படத்தொகுப்பு (05 புள்ளிகள்)

03. பின்வருவனவற்றுக்குச் சுருக்கமான விடையளிக்குக.

(அ) திரைப்படங்கள் மீதான கருத்தியல்சார் திறனாய்வு (Ideological Approaches on Films) (10 புள்ளிகள்)

(ஆ) ஒரே இயக்கமையம் கொண்ட எதிர் நிலைகள் இரண்டு (Pivotal Binary Opposite) (10 புள்ளிகள்)

## பகுதி – II

04. 'திரைப்படங்கள் குறிப்பாக தமிழ்த் திரைப்படங்கள் திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டு, கட்டுடைக்கப்படுவதன் மூலமே அவை சமூகத்தில் எற்படுத்தக்கூடிய உண்மையான தாக்கங்கள் வெளித்தெரியவரும்; இக்கருத்தின்பாலான உங்கள் வாதங்களை முன்வைக்குக.

05. திரைப்படமொன்றில் பயன்படுத்தக்கூடிய கதையையும் திரைக்கதையையும் (Story and Screenplay) வேறுபடுத்தி ஆராய்க.

06. சமூகவியல் ஆய்வு நோக்கில் திரைப்படமொன்றைப் பார்ப்பதன் மூலம் பார்வையாளர்கள் அடையும் 'பயன்களும் மகிழ்ச்சியூட்டுதல்களும்' (Uses and Gratifications) தொடர்பில் எடுத்துரைக்குக.

07. 'தமிழ்த் திரைப்படங்களில் வழக்கம்மாறாத் தன்மைகள் (Stereotypes) அதிகம் இடம்பெறுகின்றன. உங்கள் கருத்துக்களை தகுந்த உதாரணங்களுடன் விளக்குக.

*****